00001

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
முன்பள்ளிக் கல்வி உயர்தர சான்றிதழ் நிகழ்ச்சித் திட்டம் 2018/2019
இறுதிப் பரீட்சை – 2020
**ESC2217/EPE2517/EPA2517/EPC2517:முன்பிள்ளைப் பருவக் கல்வியில் சமூகக் கலாசார நோக்கு**

பகுதி **I** இல் அனைத்து வினாக்களுக்கும் பகுதி **II**இல் எவையேனும் மூன்று (03) வினாக்களும் விடையளிக்குக.

காலம் : மூன்று (03) மணித்தியாலங்கள்

| திகதி: 18.07.2020 | நேரம்:பி.ப.01.30 – பி.ப.4.30 |
|---|---|

## பகுதி – I

1. **'ஆரம்ப சமூகமயமாக்கல்'** என்னும் பதத்தினை விளக்குக.

2. **'இரண்டாம் நிலை சமூகமயமாக்கல்'** என்னும் பதத்தினை விளக்குக.

3. முன்பள்ளிப் பிள்ளைகளுக்கு கற்றல் சூழலை வழங்கும் போது **'மரியா மொண்டிசூரி'**யின் கருத்துக்களின் முக்கியத்துவத்தினை விளக்குக.

4. பிள்ளை மையக்கல்வியை அமுல்படுத்துதலில் ரூசோவின் பங்களிப்பை விளக்குக.

5. இலங்கைத் தாய்மார் வெளிநாடு செல்வதானது அவர்களது பிள்ளைகளின் விருத்தியில் எவ்வாறான தாக்கத்தினை ஏற்படுத்துகிறது என சுருக்கமாகக் குறிப்பிடுக.

6. தனிக்குடும்பங்கள் பிள்ளை வளர்ப்புத் தொடர்பான எதிர்நோக்கும் பிரச்சினைகள் **ஐந்தினை(5)** குறிப்பிடுக.

7. **'பின்தங்கிய பிள்ளைகள்'** என்னும் பதத்தினை பொருத்தமான வரைவிலக்கணத்துடன் விளக்குக.

8. நான்கு வயதிற்கும் ஐந்து வயதிற்கும் இடைப்பட்ட பிள்ளைகளுக்கு வழங்கப்படக் கூடிய பொறுப்புக்கள் **ஐந்தினை(5)** பட்டியலிடுக.

**(8x5=40 புள்ளிகள்)**

## பகுதி – II

9. i. பொருத்தமான வரைவிலக்கணத்துடன் **'குடும்பம்'** என்னும் பதத்தினை வரையறுக்க.

**(4 புள்ளிகள்)**

ii. பரிவுடன் ஏற்றுக் கொள்ளத்தக்க குடும்பம் ஒன்றின் இயல்புகளைத் தருக.

**(6 புள்ளிகள்)**

iii. இலங்கையில் பாரம்பரிய குடும்ப அமைப்பு மாற்றமுற்று வருவதற்குப் பின்னாலுள்ள காரணங்களை விளக்குக.

**(10 புள்ளிகள்)**

10. i. தனிப்பெற்றோர் குடும்பங்களில் அவர்களின் பிள்ளைகளைப் பராமரித்தலில் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் **மூன்றினைக்(3)** குறிப்பிடுக.

**(4 புள்ளிகள்)**

ii. பிள்ளைகளின் முழு விருத்தி தொடர்பாக குடும்பங்கள் ஆற்றக் கூடிய பங்களிப்பை பகுப்பாய்வு செய்க.

**(6 புள்ளிகள்)**

iii. பிள்ளைகளின் விருத்தியில் உதவுவதற்காக பெற்றோருக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும்போது கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயங்கள் மூன்றினை விளக்குக.

**(10 புள்ளிகள்)**

11. i. அனுகூலமற்ற சுற்றாடலில் வாழும் பிள்ளைகளைப் பாதிக்கும் மறையான காரணிகள் **நான்கினை(4)** குறிப்பிடுக.

**(4 புள்ளிகள்)**

ii. மேலே நீங்கள் குறிப்பிட்ட காரணிக்குள் ஏதாவது ஒன்றினை பொருத்தமான உதாரணங்களுடன் விளக்குக.

**(6 புள்ளிகள்)**

iii. அனுகூலமற்ற சூழலில் இருந்து முன்பள்ளிக்கு வரும் பிள்ளைகளுக்கு உதவுவதற்காக முன்பள்ளி ஆசிரியர் எடுக்கக் கூடிய நடவடிக்கைகள் எவை?

**(10 புள்ளிகள்)**

12. i. முன்பள்ளிப் பிள்ளைகளுக்கு சகபாடிகளின் இடைத்தொடர்பானது எவ்வாறு அவர்களின் சமூகமயமாக்கலில் துணை புரிகின்றதென விளக்குக.

**(10 புள்ளிகள்)**

ii. இளம்பிள்ளைகளை சமூகமயப்படுத்துவதில் குடும்பத்தின் செல்வாக்கினை பொருத்தமான உதாரணங்களுடன் விளக்குக.

**(10 புள்ளிகள்)**

13. i. பிள்ளையின் முழுவிருத்திக்கு அதன் வீட்டு பௌதீகச் சூழல் எவ்வாறு செல்வாக்குச் செலுத்துகின்றதென்பதை பொருத்தமான உதாரணத்துடன் விளக்குக.

**(10 புள்ளிகள்)**

ii. பிள்ளையின் முழுவிருத்திக்கு துணை புரிவதற்கு ஏற்ற வகையில் எவ்வாறு நீங்கள் முன்பள்ளியின் பௌதீகச் சுற்றாடலை ஒழுங்கமைப்பீர் என விளக்குக.

**(10 புள்ளிகள்)**